TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு ~~154 இன் கீழ்~~)

C 8213033

1. District / மாவட்டம்: கிருஷ்ணகிரி  PS / காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு  Year / ஆண்டு: 2024  FIR No. / மு.த.அ. எண்: 07/AC/2024  Date / நாள்: 01.10.2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: திருத்தப் பட்ட சட்டம் 2018  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 29.09.2024 சுமார் 1400 மணி
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 30.09.2024 சுமார் 1145 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2024  Time : நேரம் 1230 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —  Time : நேரம் 1315 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 60 கி.மீ தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி கல்லாவி காவல் நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. அழகரசன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அண்ணாமலை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி 64, வேலம் பட்டி, M. வெள்ளாளப் பட்டி(அஞ்), ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ரவி, காவல் உதவி ஆய்வாளர், கல்லாவி காவல் நிலையம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Azhagarajan 01/10/2024 | 01/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.10.2024 at 15.15hrs.

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.கு.த.க. பிரிவு,
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 01.10.2024 ஆம் தேதி மதியம் 12.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், M.வெள்ளாளப்பட்டி அஞ்சல், வேலம்பட்டியை சேர்ந்த, அண்ணாமலை மகன் திரு.A.அழகரசன் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், A.அழகரசன், வயது-36, த/பெ.அண்ணாமலை, 64, வேலம்பட்டி, M.வெள்ளாளப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கிருஷ்ணகிரி. நான் மேலே சொன்ன முகவரியில் கடந்த 30 வருடத்திற்கு மேலாக எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். திருமணம் ஆகி எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். வேலம்பட்டி கிராமத்தில் எனது அப்பா பெயரில் உள்ள 2.6 ஏக்கர் நிலத்தில் நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது அப்பா பெயரில் உள்ள விவசாய நிலத்திற்கு அருகில் சண்முகம் என்பவரின் நிலம் உள்ளது. சண்முகம் என்பவரின் நிலத்தில் உள்ள கிணற்றிலிருந்து அவரது ஆள்துளை கிணற்றுக்கு மின்சார ஒயர் செல்கிறது. இந்த மின்சார ஒயர் எனது நிலத்தின் வரப்பை ஒட்டி 3 அடி உயரத்தில் தாழ்வாக செல்வதால் அதை ஒரு குச்சிவைத்து தூக்கி கட்டும்படி எனது பக்கத்து நிலத்துக்காரர் சண்முகத்திடம் சொல்லுமாறு எனது எதிர் வீட்டில் உள்ள சரோஜா என்பவரிடம் சொல்லி அனுப்பினேன். பிறகு நான் எனது நிலத்தில் நெற்பயிர் நடவு செய்ய வேண்டி நிலத்திலிருந்த தேவையில்லாத செடிகளை பிடுங்கி வரப்பின் ஓரத்திலிருந்த காலியிடத்தில் போட்டு போன வாரத்தில் ஒரு நாள் அதில் தீ மூட்டினேன். அப்போது அந்த தீ ஜுவாலையானது எனது நிலத்தின் வரப்பை ஒட்டி 3 அடி உயரத்தில் தாழ்வாக செல்லும் சண்முகம் என்பவரின் மின்சார ஒயரில் பட்டு அந்த ஒயர் சுமார் 3 அடி நீளத்திற்கு லேசாக சேதமடைந்துவிட்டது. அன்றே சண்முகம் என்னிடம் வந்து இது குறித்து சத்தம் போட்டார். இது பற்றி என் மீது நடவடிக்கை எடுக்கும்படி சண்முகம் கல்லாவி போலீஸ் ஸ்டேசனில் சில நாட்களுக்கு முன் புகார் மனு கொடுத்திருந்தார். இது பற்றி விசாரிக்க கல்லாவி போலீஸ் ஸ்டேசன் SI ரவி என்பவர் 28.09.2024 சனிக்கிழமை மதியம் எங்கள் ஊருக்கு நேரில் வந்து

விசாரித்துவிட்டு 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை கல்லாவி போலீஸ் ஸ்டேசனுக்கு நேரில் விசாரணைக்கு வரச்சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதனால் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த செல்வம், ராமலிங்கம், பழனி, ரவி மற்றும் குமரன் ஆகியோரும் எனது பக்கத்து நிலத்துக்காரர் சண்முகமும் ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 11.00 மணிக்கு கல்லாவி போலீஸ் ஸ்டேசனுக்கு நேரில் சென்று காத்திருந்தோம். SI ரவி மதியம் சுமார் 01.30 மணிக்கு போலீஸ் ஸ்டேசனுக்கு வந்தார். பிறகு இரு தரப்பினரையும் கூப்பிட்டு பேசி இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாகவும் எங்கள் இருவரின் நிலத்தையும் அளந்து பார்த்தபின், சண்முகம் கம்பிவேலி போட்டுக்கொள்வது என எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பி வைத்தார். நாங்கள் வெளியே வந்த நின்று கொண்டிருந்தபோது, என்னுடன் வந்த எனது ஊர்க்காரர் ரவி என்பவர் என்னிடம் SI ரவி போலீஸ் ஸ்டேசனுக்கு எதிரில் இருக்கும் மளிகை கடையில் நிற்கிறார் அவரைப் போய் பார் என்றார். உடனே நான் சென்று அவரைப் பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் உங்க பிரச்சினையை நான் முடிச்சு தர்றேன் எனக்கு பணம் ரூ.5,000 கொடுத்து விடு என்று என்னிடம் லஞ்சம் கேட்டார். அவ்வளவு என்னால் தர முடியாது சார் என்று நான் சொன்னதற்கு, சரி ஒரு 3,000 ரூபாய் கொடு என்றார். என்னிடம் இப்போது பணம் இல்லை நாளைக்கு வர்றேன் சார் என்று அவரிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு 30.09.2024 திங்கள்கிழமை காலை சுமார் 08.30 மணிக்கு நான் அவருக்கு போன் செய்து மாட்டுத்தீவனம் வாங்குவதற்கு கல்லாவி வரும்போது உங்களைப் பார்க்கிறேன் என்று சொன்னேன். அன்று காலை சுமார் 10.30 மணிக்கு அவரே எனக்கு போன் செய்தார் ஆனால் நான் பைக்கில் வந்து கொண்டிருந்ததால் நான் போனை எடுக்கவில்லை. பின்னர் சுமார் 11.15 மணிக்கு கல்லாவி போலீஸ் ஸ்டேசனுக்கு நான் நேரில் சென்ற போது, SI ரவி ஸ்டேசனிலிருந்து தனது பைக்கில் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தார். என்னை பார்த்தவுடன் பணம் 3,000 ரூபாய் கொண்டுவந்துட்டியா என்று கேட்டார். அதற்கு நான் மாட்டுத்தீவனம் வாங்குவதற்கே 2,000 ரூபாய் கடனாக தெரிந்தவரிடம் வாங்கி வந்தேன் சார் என்றேன். அதற்கு SI ரவி திருப்தியாக செய்டா, நான் உன்பக்கம் தான் இருக்கேன் என்று சொன்னார். நான் கொஞ்சம் கம்மி பண்ணி சொல்லுங்க சார் என்று கேட்டதற்க்கு சரி 2,500 ரூபாய் கொடுத்துவிடு என்று SI ரவி சொன்னார். அதற்கு நான் சரி சார் பணம் ஏற்பாடு பண்ணிட்டு நாளைக்கு வர்றேன் சார் என்று

சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பி வந்து விட்டேன். எனக்கு கல்லாவி போலீஸ் ஸ்டேசன் SI திரு.ரவி என்பவருக்கு பணம் ரூ.2,500 லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட கல்லாவி போலீஸ் ஸ்டேசன் SI திரு.ரவி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) A.அழகரசன் 01.10.2024.

Sir, received a computer typed complaint on 01.10.2024 at 12.30 hrs and a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Krishnagiri V&AC, Cr.No.7/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by PC amendment Act 2018 was registered today 01.10.2024 at 13.15 hrs against the accused Tr.Ravi, Sub-Inspector of Police, Kallavi Police Station. The original FIR along with complaint is sent to the Hon'ble court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and copies are sent to the officers concerned.

(Sd.) 01/10/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கிருஷ்ணகிரி